# வருடாந்த அறிக்கை
# 2007



## தாவரவியல் பூங்காக்கள் நம்பிக்கை நிதியம்

**தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம்**

**பேராதனை.**

# <u>இலங்கையின் தாவரவியல் பூங்காக்களை அபிவிருத்தி செய்வதற்கும் அவற்றின் நலன்புரி நடவடிக்கைகளுக்குமான நம்பிக்கை நிதியம்</u>

## வருடாந்த அறிக்கை - 2007

இலங்கையின் தாவரவியல் பூங்காக்களை அபிவிருத்தி செய்வதற்கும் அவற்றின் நலன்புரி நடவடிக்கைகளுக்குமான நம்பிக்கை நிதியம் என்ற பெயரில் அப்போதைய விவசாய, காணி மற்றும் வனவள அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்ட 1995-12-15ம் திகதிய அமைச்சரவைப் பத்திரத்தை கருத்திற்கொண்டு 1996-02-07ம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் **தாவரவியல் பூங்காக்களை அபிவிருத்தி செய்வதற்கும் அவற்றின் நலன்புரி நடவடிக்கைகளுக்குமான நம்பிக்கை நிதியத்தை** ஏற்படுத்துவதற்கான அனுமதி வழங்கப்பட்டது.

தாவரவியல் பூங்காக்களுக்கான நுழைவுச் சீட்டு விற்பனையின் மூலம் கிடைக்கும் வருமானத்தில் 25%த்தை வருடாந்தம், தாவரவியல் பூங்காக்களை அபிவிருத்தி செய்வதற்கும் அவற்றின் நலன்புரி நடவடிக்கைகளுக்குமான நம்பிக்கை நிதியத்திற்கான வருமானமாக ஒதுக்கீடு செய்வதோடு, இந்நிதியத்தின் பிரதான வருமான மூலம் அதுவாகும். அதற்கு மேலதிகமாக இந்நிதியமானது தனது வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்காக பொருத்தமான நடவடிக்கைகளில் ஈடுபடவும் முடியும்.

# தாவரவியல் பூங்காக்கள் நம்பிக்கை நிதியம்

1. நம்பிக்கை நிதியத்தின் பெயர் : இலங்கையின் தாவரவியல் பூங்காக்களை அபிவிருத்தி செய்வதற்கும் அவற்றின் நலன்புரி நடவடிக்கைகளுக்குமான நம்பிக்கை நிதியம்.

2. தன்மை : தாவரவியல் பூங்காக்களின் அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் தேவைப்படும் சந்தர்ப்பங்களில் மீண்டெழும் செலவின நடவடிக்கைகளுக்கு நிதி உதவி வழங்குதல்.

3. உரிய சுற்று நிருபங்கள் :

   I) நிதியத்தை ஆரம்பித்தல் - 1917ம் ஆண்டின் 09ம் இலக்க நம்பிக்கை நிதிய கட்டளைச் சட்டத்தின் படி.
   II) கணக்கு வைத்திருத்தலுக்கும் கணக்குகளை அறிக்கைப் படுத்தலுக்குமான திறைசேரிச் சுற்று நிருபம் : 1977 ஆகஸ்ட் 16ம் திகதிய 836ம் இலக்கச் சுற்று நிருபம்.

4. ஆரம்பித்ததிகதி : 1996 டிசம்பர் 20
5. அலுவலகம் : பேராதனை, தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்கள பிரதான பணிமனை.
6. வங்கி : இலங்கை வங்கியின் பேராதனைக் கிளை, கணக்கு இலக்கம் : 0007040848
7. நம்பிக்கை நிதியத்தின் குறிக்கோள்கள் :
   அ) இலங்கையிலும் மற்றும் வெளிநாடுகளிலும் எமது தாவரவியல் பூங்காக்கள் தொடர்பில் நிலவும் அபிபிராயங்களை மேம்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
   ஆ) சூழலியல், கல்வியியல் மற்றும் தாவரங்கள் தொடர்பில் தற்போது நிலவும் பாதுகாப்பு முறைமைகள் பற்றி அர்த்தமுள்ள நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.
   இ) தாவரவியல் பூங்காக்களில் சேவையில் ஈடுபட்டுள்ள விஞ்ஞானிகளது துறைசார் அறிவு, செயற்பாடுகள் மற்றும் வசதிகளை மேம்படுத்துவதோடு உரிய செயற்பாடுகளுக்குத் தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு நிதியுதவி வழங்குதல்.
   ஈ) தாவரச் சேமிப்புக் குறித்தும் முன்னேற்றகரமான வேலைத்திட்டமொன்றை ஆரம்பித்தல்.
   உ) தாவரவியல் பூங்காக்களின் பயன்பாட்டுக்காக சூழலியல், கல்வியியல் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பிலான தொழில்நுட்பத்துறை சார் செயற்பாடுகளை மேம்படுத்தலும் அவற்றுக்கு உதவுவதும்.
   ஊ) தாவரவியல் விஞ்ஞானிகளுக்கும் மற்றும் பூங்காவிற்கு வருகை தருகின்றவர்களுக்கும் தேவையான வசதிகளைச் செய்துகொடுப்பதற்குத் தேவையான எந்தவொரு அவசர நிர்மாணப் பணியையும் பொறுப்பேற்றல்.
   எ) தேவையான சந்தர்ப்பகளில் மீண்டெழும் செலவினங்களுக்கான ஒதுக்கீடுகளில் ஏற்படும் குறைகளை குறை நிரப்புச்செய்தல்.

2007ம் ஆண்டில் நிதியத்தின் நிதி நிலைமை

2007-01-01ம் திகதிக்கான ஆரம்ப மீதி = ரூ. 39,
159,242.61(வரவு)

சேர்க்கப்பட்டது:

வருடத்துக்கான வைப்புக்கள் = ரூ. 26,005,536.25

------------------------

= ரூ. 65,164,778.86

கழிக்கப்பட்டது:

வருடத்துக்கான செலவு = ரூ. 11,428,643.32


------------------------

2007-12-31ம் திகதிக்கான மீதி = ரூ. 53, 736,135.54

**நிதியத்தின் ஒதுக்கீடுகளைப் பயன்படுத்தி 2007ம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்ட விஷேட அபிவிருத்திப் பணிகள்.**

- தாவரவியல் பூங்காக்களை பராமரித்தலுக்காக மீண்டெழும் செலவுகள் மூலமான ஒதுக்கீடுகள் போதுமானதாக அமையாததனால் ஒப்பந்த ஊழியர் சம்பளங்களுக்காக நிதியத்தின் மூலம் ரூ. 2.5 மில்லியன் செலவிடப்பட்டு பூங்காக்கள் சிறந்த முறையில் பேணப்பட்டன.

- பேராதனை தாவரவியல் பூங்காவின் கல்வி மற்றும் பயிற்சி நிலையத்திற்கு புதிதாக நிர்மணிக்கப்பட்ட கேட்போர் கூடக் கட்டிடத்தின் எஞ்சியிருந்த வேலைகளை நிறைவு செய்ய நிதியத்திலிருந்து 1.5 மில்லியன் ரூபாவும் அவ்வலகுக்கு கேட்டல் மற்றும் பார்த்தல் உபகரணங்களைக் கொள்வனவு செய்ய 02 மில்லியன் ரூபாவும் செலவிடப்பட்டது.





கேட்போர் கூடத்துக்காக தளபாடங்கள் கொள்வனவு செய்யப்பட்டன.

நவீன உபகரணங்களின் துணையுடன் நடாத்தப்படும் ஒரு விரிவுரை

- கம்பஹா தாவரவியல் பூங்காவுக்கு புதிதாக சுவீகரிக்கப்பட்ட காணிகளை அபிவிருத்தி செய்து, நீர்ப்பாசனத் திணைக்களத்தின் மூலம் நீர்த்தேக்கமொன்றும் நிர்மாணிக்கப்பட்டது. இதற்காக நிதியத்திலிருந்து இவ்வருடம் **1.1** மில்லியன் ரூபா செலவிடப்பட்டது.





கம்பஹா தாவரவியல் பூங்காவின் நீர்த்தேக்க நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப்படல்.

நீர்ப்பாசனத் திணைக்களத்தின் உதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட நீர்த்தேக்கம்

- பிரதான பணிமனைக் கட்டிடத் திருத்தம் மற்றும் ஏனைய பூங்காக்களின் அபிவிருத்திப் பணிகளுக்காக மொத்தம் 01 மில்லியன் ரூபா நிதியத்திலிருந்து செலவிடப்பட்டது.

**<u>நிதியத்தின் கீழ் 2007ம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட விஷேட அபிவிருத்திப் பணிகள் பற்றிய சுருக்கம்.</u>**

| விடயம் | செலவு (ரூ) |
|---|---|
| 1. ஒப்பந்த ஊழியர் சம்பளம் | 2,566,882.37 |
| 2. ஊழியர் பயிற்சி | 190,572.00 |
| 3. பேராதனைப் பூங்காவின் கேட்போர் கூட நிர்மாண எஞ்சிய பணிகள் | 1,520,796.00 |
| 4. கேட்போர் கூட தளபாடம் மற்றும் உபகரணம் | 2,082,954.00 |
| 5. கம்பஹா பூங்கா அபிவிருத்தி | 1,126,736.00 |
| 6. பூக்கன்றுகள் மற்றும் விதைகள் கொள்வனவு | 62,550.00 |
| 7. ஹக்கல பூங்கா வாகனத் தரிப்பிட அபிவிருத்தி | 102,230.00 |
| 8. பிரதான பணிமனை அபிவிருத்தி | 632,131.00 |

எஸ். லியனகம

தலைவர், தாவரவியல் பூங்காக்கள் நம்பிக்கை நிதியம் மற்றும் செயலாளர், விளையாட்டு மற்றும் பொதுப் பொழுதுபோக்கு அலுவல்கள் அமைச்சு.

கலாநிதி. டீ. எஸ். ஏ. விஜேசுந்தர

செயலாளர், தாவரவியல் பூங்காக்கள் நம்பிக்கை நிதியம் மற்றும் பணிப்பாளர் நாயகம், தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம்